# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 264/மா/2023**
**நாள்: 26.09.2023**

ஊர் பொது மக்கள்,
சென்னை- 600 094. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் -9, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சூளைமேடு, வரதை ராஜப்பேட்டை மெயின் ரோடு என்கிற முகவரியில் இருந்து ஊர் பொது மக்கள் பெயரில் 09.08.2023 நாளிட்ட மனு 14.08.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 264/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, சூளைமேடு, வரதை ராஜப்பேட்டை மெயின் ரோடு என்கிற முகவரியில் இருந்து ஊர் பொது மக்கள் தங்களது 09.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

வரதை ராஜப்பேட்டை மெயின் ரோட்டில் பில்லா (எ) ரவிந்திரன் பல மாதங்களுக்கு முன்பு அம்பேத்கர் பேனரை வைத்து ஊர் பொது மக்களுக்கு இடையூறாக சாலையை ஆக்கிரமிப்பு செய்ய திட்டமிட்டார். மேலும், ரவிந்திரன் என்ற பில்லா, அம்பேத்கர் பேனர் வைத்து எதுவும் செய்யலாம் என்று பொதுமக்கள் மத்தியில் கூஞரைக்கிறார். தற்போது அம்பேத்கர் பேனர் பொது மக்கள் மீது விழுந்து விபத்து அல்லது உயிர் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இது குறித்து புகார்கள் மண்டலம்-9, பகுதி-26, 112–வது வார்டு உதவிப் பொறியாளர் பெரியசாமி அவர்களிடம் பொது மக்கள் சார்பாக அஞ்சல் மூலம் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே நாங்களும் பட்டியல் இன மக்கள் தான். ஆகவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 3-ன் கீழ் மாண்புமிகு ஐயா அவர்கள் உடனடியாக இந்த பேனரை எடுத்து பொது மக்கள் உயிருக்கு பாதுகாப்பு கிடைத்திட வழி செய்திடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 9, மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 12.09.2023 நாளிட்ட அறிக்கையில்:**

"The Dr. Ambedhakar Hoarding at Varadharajapet Main Road has been removed on 11.09.2023, The photocopy is attached for your reference" என்று தெரிவித்துள்ளார்.

**3) இம்மனு தொடர்பாக எதிர்மனுதாரரை 21.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9ன் உதவிப் பொறியாளர் அவர்கள் 21.9.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் சென்னை சூளைமேடு ஊர் பொதுமக்கள் அளித்துள்ள புகார் மனுவில், சென்னை சூளைமேடு வரதராஜபேட்டை பிரதான சாலையில் அனுமதியின்றி விளம்பரப்பலகை (hoardings) வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதையடுத்து மேற்கண்ட இடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகை காவல் துறை உதவியுடன் 11.9.2023 அன்று அகற்றப்பட்டுவிட்டது என்பதையும், மேலும் மேற்கண்ட இடத்தில் விளம்பரப் பலகை ஏதும் வைக்காதவாறு மாநகராட்சி அலுவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**4) முறையீட்டு மனுதாரரின் மனு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 9ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன :**

சென்னை, சூளைமேடு, வரதைராஜப்பேட்டையை சேர்ந்த ஊர்ப் பொதுமக்கள் வரதைராஜப்பேட்டை மெயின் ரோட்டில் பேனரை வைத்து ஆக்கிரமித்து பொதுமக்களுக்கு இடையூறாக சிலர் செயல்படுவதாகவும், எனவே அங்குள்ள பேனரை அகற்றிட வேண்டி தங்களுடைய மனுவில் கோரியுள்ளனர்.

மனுதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரி ஏதும் குறிப்பிடாமல் ஊர்பொதுமக்கள் என்ற பெயரில் புகார் மனு அளித்து இருந்ததால், 21.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு மனுதாரர்களின் சார்பாக யாருக்கும் அழைப்பாணை அனுப்ப இயலவில்லை.எனினும், சென்னை சூளைமேடு வரதராஜபேட்டை பிரதான சாலையில் அனுமதியின்றி விளம்பர பலகை (hoardings) வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்ததையடுத்து, மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்து அங்கு வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகையை காவல்துறை உதவியுடன் 11.9.2023 அன்று அகற்றப்பட்டுவிட்டது என்பதும் மேலும், மேற்கண்ட இடத்தில் விளம்பரப்பலகை ஏதும் வைக்காதவாறு மாநகராட்சி அலுவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9ன் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவரின் அறிக்கை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவித்துள்ளனர்.

5) Tamil Nadu Urban Local Bodies Rules 2023-ல் அனுமதியில்லாமல் அமைக்கப்படும் விளம்பர பலகைகள் குறித்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

**Rule 343:- <u>Unauthorised, obscene or objectionable digital banners or pla-cards</u>** - (1) The Commissioner, may confiscate or summarily remove any digital banner or placard erected without permission, and recover the cost of removal from the person who has erected it.

The Commissioner may, either suo-motu or on representation, direct the permission holder of a digital banner or placard to remove it immediately, if its contents are considered to be obscene or objectionable, failing which the Commissioner shall summarily remove it, through his authorized representative and recover the cost of removal from the applicant.

6) இருப்பினும், சென்னை சூளைமேடு வரதராஜபேட்டையில் அகற்றப்பட்ட விளம்பரப் பலகை மீண்டும் அங்கு அமைக்கப்படாமல் இருக்க உரிய கண்காணிப்பு நடவடிக்கையை எடுக்குமாறும், மண்டலம்-9ல் இவ்வாறு அனுமதியின்றி வைக்கப்படும் விளம்பர பலகைளை கள ஆய்வாளர்களை கொண்டு கண்டறிந்து, அவற்றை அகற்ற Tamil Nadu Urban Local Bodies Rules 2023-ன்படி உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் மண்டல அலுவருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. விளம்பரப் பலகைகள் குறித்து இதுபோன்ற புகார்கள் வரும் முன்னரே இதுபோன்று நடவடிக்கைகள் எடுத்தால் அது நன்றாயிருக்கும். மேலும் பொது மக்களின் பாராட்டையும் பெறும் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
2. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.4, 4வது குறுக்குத் தெரு,
   லேக்-வியூ ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
3. துணை ஆணையர் (work)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை /
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்